தரிசனச்சுடர்

அருட்பணி மகாநாட்டுச் சிறப்பிதழ்

மகாநாட்டுக் காட்சிகள்

முன்வரிசையில் அமர்ந்திருப்போர் செய்தியாளர்களும், தலைவர்களும்

தமிழ்நாட்டிலிருந்து கலந்து கொண்டவர்கள்

நாகாலாந்து பாடகர்குழு

பிப்ரவரி 1985

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8)* உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

தரிசனச் சுடர்

தரிசனம்	சுடர்
4	3

Editor :
JAMES RATNARAJ

அழியும் உலகு 3

அறுப்பு மிகுதி 5

மகாநாடு சென்று வந்தேன் 7

செய்திக் கதிர் 8

ஜெபத் துணைவன் 9

ஊழியர்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள் 10

நமது ஊழியர்கள் 11

வேத ஆராய்ச்சி 12

நேரத்தை செலவு செய்தல் 16

ஐரிஸ் பால் 17

பேட்டி 18

ஆண்டுச் சந்தா

மாணவர்க்கு ரூ 5/-

மாணவரல்லாதோர்க்கு ரூ 10/-

தொடர்பு முகவரி :

THARISANA SUDAR
UESI-TN OFFICE
Guru Medical Hall
TIRUCHI-17.

ஆசிரியரிடமிருந்து......

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

கட்டாக் 'அருட்பணி மாநாட்டில்' இப் புதிய ஆண்டைத் தொடங்க தேவன் எனக்குக்கிருபை செய்தார். மாநாட்டில் 1200 பேர் கலந்து கொண்டனர். தமிழகத்திலிருந்து 100 பேர் பங்கு பெற்றனர். செய்திகளும், அறை கூவலும், சாட்சிகளும் என்னை சவாலுக்கு அழைத்தன. எருசலேம் பாழாகியிருக்கிறதைக் கேள்வியுற்ற நெகேமியாவிற்கு ஏற்பட்ட பாரம், மறுபடியும் அர்ப்பணித்த எனக்குள்ளும் ஏற்பட்டது. எதிர்ப்புகளிடையே அனைவரின் ஒத்துழைப்போடும் எருசலேம் அலங்கம் கட்டி முடிக்கப்பட்டது போல, நம் பணியும் விரைவில் நிறைவேற நீங்களும் மனப்பூர்வமாக ஒத்துழைப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். இம் மாநாட்டிற்காக ஜெபித்த, பொருளுதவி செய்த அனைவருக்கும் நன்றி.

சாயர்புரத்தில் நடைபெற்ற பெண்கள் சீஷத்துவ முகாமில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, திருநெல்வேலி திருமண்டலப் பேராயர் அருள்திரு. ஜேசன் தர்மராஜ் அவர்கள், முழு நேர ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்ததாகக் குறிப்பிட்ட போது அனைவரும் பரவசமடைந்தனர்.

கடந்த மாதத்தில் திட்டமிட்டபடி நடந்த பத்து முகாம்களில் தீர்மானம் எடுத்த மாணவர்கள் உண்மையான சீடர்களாயிருக்க ஜெபியுங்கள். கோவையிலும், சேலத்திலும் நடைபெற இருந்த முகாம்கள் சில காரணங்களால் தடைபட்டன.

இக்கல்வியாண்டு முடிய 2 மாதங்களே உள்ளன. சர்வதேச இளைஞர் ஆண்டாகிய 1985ல் நாம் மாணவர் பணியில் தீவிரமாய் ஈடுபடுவோம்.

அன்பரின் பணியில்,

ஜேம்ஸ் இரத்தினராஜ்

அழியும் உலகு (Rev. P. T. சாந்தப் பில்லா)

(மிஷினரி முகாமில் கொடுத்த செய்தியின் தொகுப்பு)

நாம் உலகத்தைப்பற்றி எண்ணும் போது அழியும் உலகம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். உலகம் மிகவும் வளர்ந்து முன்னேற்றத்தின் பாதையில் செல்கிறது என்று அநேக இளைஞர்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் மனிதனுடைய கடந்த கால நிகழ்கால அனுபவங்களும் வேதாகமும் உலகம் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்ற உண்மையை உறுதிப்படுத்துகின்றன.

ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் பாவம் உலகில் நுழைகிறதைப் பார்க்கிறோம். அந்தப் பாவம் வீட்டுக்குள் வருகிறதை 4ம் அதிகாரத்தில் படிக்கிறோம். காயீன், ஆபேலைக் கொன்ற சம்பவத்தின் மூலமாக முதன் முதலாக ஒரு குடும்பத்தில் பாவம் நுழைகிறது. பொல்லாத அந்தப்பாவம உலகின் எல்லாப் பகுதிகளிலும் பரவி விட்டது. அழிவையும், இறப்பையும் கண்டு மனம் கலங்கிய புத்தர் புத்த மதத்தை ஆரம்பித்து விட்டார். ஆதாமும், ஏவாளும செய்த பாவம் பலவிதமான குழப்பங்களும, மதங்களும் உருவாகக் காரணமாயிற்று. மரண செய்திகளும், அழிவின் செய்திகளும், திடுக்கிடும் சமபவங்களும் நாள் தோறும் செய்தித் தாள்களில் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. சமுதாயத்தில் அநியாயங்கள் பெருகி வருகின்றன.

சமீபத்தில் போபாலில் ஏற்பட்ட அழிவை நாம் அனைவரும் செய்தித் தாள்கள் மூலமாக அறிந்தோம். நமது முன்னாள் பிரதமர் திருமதி. இந்திரா காந்தியின் மரணமும், அதன் விளைவாக டில்லியில் எழுந்த வன்முறைகளும் நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கவில்லையா? இது போன்ற பல அழிவுகளும், அதிர்ச்சி நிறைந்த சம்பவங்களும் கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்திருக்கின்றன. மெக்ஸிகோவில் சுமார் 30000 பேர் விஷத்தினால் மடிந்ததை பத்திரிகைகள் வெளியிட்டன.

பவுல் அப்போஸ்தலன், மனிதர்களுடைய இவ்வித நிலைமையைக் கண்ணுற்றவராய், உலகம் அழிந்து கொண்டிருக்கிறது என்று குறிப்பால் உணர்த்துகிறார் (ரோமர் 1:18-32) அவருடைய காலத்திற்கு மட்டுமல்லாது இக்காலத்திற்கும் அவர் தம் கூற்று உண்மையாயிருக்கிறது.

அவர் ரோமாபுரியாருக்கு எழுதிய நிருபத்தில் உலகம் எவ்விதமாய் அழிந்து கொண்டிருக்கிறது என்பதை விளக்குகிறார். மனிதனுடைய ஆவிக்குரிய நிலையில் மிகவும் பின் தங்கிய நிலைமை காணப்படுகிறது. சாதாரணமாக மனிதனிடம் காணப்பட வேண்டிய நல்ல குணங்கள் கூட குறைந்து கொண்டே வருகின்றன. மனிதன் அநியாயம் செய்வதன் மூலமாக உண்மை மறைந்து கொண்டிருக்கிறது. ரோமர் 1:8இல் பவுல் இதைக் குறிப்பிடுகிறார். இந்நாட்களில் பரவிப் பெருகி வரும் அதிகமான பாவம் தேவனுடைய கோபத்தைத் தூண்டி விடுகிறதாய் இருக்கிறது.

தேவனையும் அவருடைய மகத்துவத்தையும் அறிந்திருந்தும் மனிதன் அவருக்கு விரோதமாய்ப்பாவம் செய்கிறான். நம்மை உருவாக்கியவர் தேவன் என்பதை உணராமல் நன்றியற்றவனாய் வாழ்கின்றான். இது மட்டுமல்லாமல்,தேவனை மறந்து உண்மையில்லாதவைகளை அழியக்கூடிய படைப்புகளை தொழுது கொண்டிருக்கிறான் தேவனுக்கு கொடுக்க வேண்டிய மகிமையை மற்ற உலகப் பொருட்களுக்குக் கொடுக்க ஆரம்பித்து விட்டான்.

மாம்ச இச்சைகளுக்கு மனிதன் அடிமைப்பட்டு, இயல்பான நல் சுபாவத்துக்கு விரோதமாய் இன்பங்களை அனுபவிக்க ஆரம்பித்து விட்டான். மனிதன் சுய நலத்துடன் இன்பமாய் வாழ நினைப்பதே, பலரின் அழிவிற்குக் காரணமாயிருக்கிறது. இவ்வாறு மனிதனுடைய ஒழுக்கக்கேடு உலகத்தை அழிவின் பாதைக்குக் கொண்டு செல்கிறது. பொறாமையுணர்வும், ஒற்றுமையின்மையும் மனிதர்களிடையே வளர்ந்து வருகின்றன.

மனிதனுடைய இந்த செய்கைகளினால் தேவன் மிகவும் துக்கமடைகிறார் மனிதனைத் தன் சுய விருப்பத்தின்படி செயல்பட அனுமதித்து விட்டார். தேவன் யாரையும் கட்டுப்படுத்த விரும்புகிறதில்லை. ஆனாலும், நாம் நம்முடைய விருப்பத்தின்படி வாழும் போது மிகவும் துன்பத்துக்குள்ளாகிறோம். பெரிய மனிதனாலும் பிரதமரேயானாலும், சிறியவர்களானாலும் ஒருவரை வழிநடத்த, கட்டுப்படுத்த ஒருவர் தேவை அவரே உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து. அழிவிலிருந்து உலகைக் காப்பாற்ற ஒரே வழி மனித வாழ்வினை தேவன் ஆட்சி செய்ய வேண்டும்.

மேலும் மனிதன் பணத்தின் மேல் ஆசைவைத்து, அதற்காக எதையும் செய்யத் தயாராகிறான் அறிவியலின் வளர்ச்சியும், மனிதன் தேவனைத் தேடும் உணர்விலிருந்து பிரிக்கிறது மனிதர்களையே தலைசிறந்தவர்களாக வழிபடும் நிலைமை வளர ஆரம்பித்து விட்டது 'கடவுள் இல்லை' என்று சொல்லும் நிலைமையை விட இந்நிலையை மிக மோசமாசமானதன்றோ?

அழியும் இந்த உலகிற்கு, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட நாம், கொடுக்கும் செய்தி என்ன? தட்டுத் தடுமாறும் இந்தியாவை அழிவினின்று காக்க நீங்கள் நிறைவேற்றக் கூடிய பங்கு என்ன? இந்தப் பங்கை நிறைவேற்றா விட்டால், நாமும் தேவனுக்கு விரோதமாய் கலகம் செய்கிறவர்களாகிறோம்.

அறுப்பு மிகுதி

உலகத்தின் பல இன, மத மக்களின் எண்ணிக்கைபற்றி தேசிய அருட்பணி மகாநாட்டில் டாக்டர் R. தியோடர் ஸ்ரீனிவாசகம். அவர்கள் கொடுத்த ஆய்வின் சுருக்கம்]

உலக ஜனத்தொகை:- இயேசு கிறிஸ்து-வாழ்ந்த காலத்தில் உலகின் மக்கள் தொகை 25 கோடியாகும். மார்ட்டின் லூதரின் காலத்தில் (1650) அது 50 கோடியானது வில்லியம் கேரி வாழ்ந்த காலத்தில் (1835) அது 200 கோடியான 1975-ம் ஆண்டில் 400 கோடி மக்கள் வாழ்ந்தனர். இப்போது உலகத்தின் ஜனத்தொகை 450 கோடி கி. பி. 2000-ம் ஆண்டில் மக்கள் தொகை 600 கோடி ஆகலாம். ஆண்டவரின் கட்டளையை நிறைவேற்ற தேவைப்படும் வேலையாட்களின் குறைவை அறிய முடிகிறதா?

கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை:- உலகில் பரவி இருக்கும் மொத்த கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 150 கோடியாகும். மீதியுள்ள 300 கோடி மக்களில் 200 கோடி மக்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்க சொந்த கலாச்சாரத்தை விட்டு பிரிந்து சென்று பணிசெய்யக்கூடிய அருட்பணியாளர்கள் தேவை!

ரோமன் கத்தோலிக்கர்கள்:- உலகின் கிறிஸ்தவ மசகட் தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் நற்செய்தியை விரும்பி கேட்கிறார்கள் அறிவிக்கத்தான் ஆட்கள் வேண்டும்.

முஸ்லீம்கள்:- (76 கோடி) பல மொழிகளைப் பேசுகின்ற இவர்கள் பல்வேறு கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு தைரியமாய் நற்செய்தியை அறிவிக்க வேண்டும்.

இந்துக்கள் 60 கோடி:- இந்தியாவில் (53 கோடி) நற்செய்தியை எதிர்க்கக்கூடிய உயர்ந்த ஜாதி இந்துக்களுக்கும் நாம் அறிவிக்க கடனாளிகள் அல்லவா?

கம்யூனிச, மார்க்ஸீஸ வாதிகள் 6 62 கோடி:- கிறிஸ்துவை பிரசங்கிக்க வாய்ப்பில்லை, தடை உண்டு ஜெபிப்பது நம் கடமை.

சீனாவின் பரம்பரை மதங்களைச் சேர்ந்தவர்கள் 50 கோடி:- (கன்பூசனிஸம், டவோயிஸம்)

இந்த மதத்தைச் சேர்ந்த இளம் தலைமுறையினரை நாம் கிறிஸ்துவண்டை சேர்க்க வாய்ப்புகள் இருக்கின்றன.

புத்தமதம் 27 கோடி-: சீனு, தாய்லாந்து, கம்போடியா, பர்மா, பூடான், இலங்கை ஜப்பான் ஆகிய நாடுகளில் பெரும்பான்மையானோரும் வியட்நாம் ஜப்பான், ஆகிய நாடுகளில் ஒரு பகுதியினரும் வாழ்கின்றனர். இவர்கள் மத்தியில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நம் ஜெபம் தேவைப்படுகிறது

மலைவாழ் மக்கள் :- 29 கோடி ஆப்பிரிக்கா, ஆசியா, தென் ஆமெரிக்கா, கண்டங்களில் உள்ள 96 நாடுகளில் வாழ்கிறார்கள். ஒவ்வொரு மொழி, கலாச்சாரத்தையும் சேர்ந்த 5000 பிரிவு மலைவாழ் மக்கள் இருக்கின்றார்கள் இந்தியா

வில் 4 கோடி உண்டு. இவர்கள் 427 பிரிவை சேர்ந்தவர்கள் திறமை உள்ள ஆட்கள் தங்கள் சொந்த கலாச்சாரத்தை விட்டு இவர்களிடையே பணிபுரிய ஆயத்தப்பட வேண்டும் வேதாகம மொழி பெயர்ப்பாளர்களும் தேவைப்படுகிறார்கள்.

ஏறத்தாழ 10,000-17,000 மக்கள் கூட்டங்கள் (People groups) இன்றும் கிறிஸ்துவின் நற்செய்தியை கேள்விப்படவே இல்லை.

இந்தியா:- மொத்த ஜனத் தொகை 68 கோடி

இந்துக்கள் 53 கோடி
முஸ்லீம்கள் 8 கோடி
மலைவாழ் மக்கள் 4கோடி
கிறிஸ்தவர்கள் 2 கோடி
மற்றவர்கள் 1 கோடி

இந்தியாவில் உள்ள இரண்டு கோடி கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையோர் தெற்கிலும், வடகிழக்கிலுமே உள்ளனர்.

பல பிரிவைச் சேர்ந்தவர்களும் வாழும் நம் நாட்டில் நற்செய்தியை அறிவிக்க வாய்ப்புகள் அதிகம் உண்டு சீக்கியர்களும் மலைவாழ் மக்களும் நம்முடைய சிறப்பு கவனத்தைப் பெற வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

நற்செய்தியை பலர் கேள்விப்படவே இல்லை. இது நாம் பலமுறை கேள்விப்பட்ட துர்ச் செய்தி. இப்பொழுதும் கேட்டு விட்டோம் தெரிந்தெடுப்பதற்கு பல பிரிவுகளும் கொடுக்கப்பட்டு விட்டன. உங்கள் பணித்தளத்தை தெரிந்து எடுத்து விட்டீர்களா?

"யாரை நான் அனுப்புவேன் யார் நமது காரியமாக போவான்"
(ஏசா 6:8)

மாணவர் மேடை

இயேசு எங்கே?

எல்லா விடைகளையும் சரியாக எழுதியவர்களின் பெயர்கள்

1. திரு. தேவசகாயம் எபனேசர் — ஸ்ரீவில்லிபுத்தூர்
2. செல்வி. J. தேவகுமாரி ரூத் — கடலூர் II பி. எஸ். ஸி.,
3. திரு. R. நாகூர் கனி I.M.A., — மதுரை
4. செல்வி. குளோரி தேவசகாயம் — திருச்சி I. M. C. A,
5. செல்வி. D. டார்ஜுலா டார்லிங்—பாளையங்கோட்டை

இவர்களுக்கு பரிசாக, புத்தகம் அனுப்பி வைக்கப்படும் எங்கள் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர் குழு

மகா நாடு சென்று வந்தேன்

1984 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத்தன்று தமிழகத்திலிருந்து கிளம்பிய மாணவர்களாகிய நாங்கள் இரண்டு நாள் பிரயாணத்திற்குப் பின் ஒரிஸ்ஸா மாநிலத்தின் முக்கிய நகரமாகிய கட்டாக் வந்து சேர்ந்தோம். அங்குள்ள ஸ்டுவர்ட் பள்ளி வளாகத்தில் தான் அருட்பணி மகாநாடு நடைபெறவிருந்தது நான் என் உள்ளத்தில் ''ஆண்டவரே இங்கே இருக்கப் போகிற ஐந்து நாட்களிலும் என்னுடனே பேசும்; ஏதாவது கற்றுத்தாரும்; நான் கேட்கவும், கற்றுக் கொள்ளவுமே இங்கு வந்திருக்கிறேன்'' என்று ஜெபித்தேன்.

ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் அளிக்கப்பட்ட செய்தியின் மூலமாக அனுதினமும் அழியும் அநேக ஆத்துமாக்களின் மேல் பாரத்தை தேவன் எனக்குத் தந்தார். உடைந்த உள்ளத்தோடு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார். என் குறைகளையெல்லாம் சுட்டிக் காட்டி என் உள்ளான நிலையை வெளிப்படுத்தினார்.

கண்காட்சி காணச் சென்றேன் இந்தியாவில் நடைபெறுகின்ற பெரும்பாலான ஊழியங்கள், மிஷனரிகளின் பணிகள் பற்றி அங்கு நான் நேரடியாக அறிந்ததோடு ஆவியானவர் மூலமாக இந்த பாரம் எனக்கும் தேவை என்பதை தெளிவாக உணர்ந்தேன்.

பணிகளின் ஆய்வு (Field Survey) மூலமாக இந்தியாவில் குறைந்த அளவு பணியே நடக்கிறது என்பதையும், மிகப் பெரிய அளவில் தேவை இருப்பதையும் உணர்ந்து கொண்டேன். சிறப்புத்துறை கருத்தரங்குகளின் (Elective Seminar) மூலமாக புதிய காரியங்கள் பலவற்றைக் கற்றுக் கொண்டேன். ஒரு சில அருட்பணியாளர்களை நேரில் சந்தித்து, பணிகளைக் குறித்து அறிந்தேன். குறிப்பாக உத்தரப்பிரதேச மாநிலத்தில் மாணவப் பணியில் ஈடுபடும் சகோதரர் மேக்ஸ்வெல் டேவிட் அவர்களையும் சந்தித்தேன். பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்திருந்த EU மாணவர்களை சந்தித்துப் பேசினேன். புதுவருட நடுநிசி ஆராதனை மிகவும் மகிழ்ச்சியை அளித்தது.

முகாமின் இறுதி நாள் வந்தது! தீர்மானம் எடுக்க வேண்டிய வேளை! நான் தேவனை நோக்கி ''ஆண்டவரே நான் படித்துக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் நான் இப்பொழுதே என்னால் ஆன மட்டும் செய்வேன். படித்து முடித்த பிறகும் தொடர்ந்து செய்வேன். உம்முடைய சித்தத்தை தெளிவாக வெளிப்படுத்தும் என ஜெபித்தேன் ''

திருச்சிக்குத் திரும்பும் போது சென்னை வரை முகாமில் கலந்து கொண்ட பல்வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், ரயிலில் ஒரே பெட்டியில் சேர்ந்து வந்த போது, பல்வேறு மொழிகளில் ஜெபம் செய்து பாடல்களைப் பாடி வந்தது, கிறிஸ்துவுக்குள் நாங்கள் ஒரு குடும்பம் என்ற உணர்வைத் தந்தது.

அந்தோணிராஜ் (III B. Com.,)
திருச்சி

செய்திக் கதிர்

- சென்னை : ஈக்காடு என்ற இடத்தில் மாணவருக்கும், மாணவியருக்கும் தனித்தனியே பொங்கல் விடுமுறை நாட்களில் நடந்த சீடத்துவ முகாம்களில் சுமார் 40 மாணவரும், 40 மாணவியரும் கலந்து கொண்டனர்.
- காங்கேயம் : பெரியார் மாவட்ட நற்செய்தி முகாம் குடியரசு தின விடுமுறையில் இங்கு நடைபெற்றது. சுமார் 120 பேர் பங்கு பெற்றனர்.
- சேலம் : இங்கு மாணவர்களுக்கான ஒரு நாள் தியானக் கூட்டம் ஜனவரி 27ம் தேதி நடைபெற்றது.
- திருச்சி : குடியரசு தின விடுமுறை நாட்களில் இங்கு நடைபெற்ற சீடத்துவ முகாமில் திரு. ஹெர்பர்ட் சாமுவேல் தேவ செய்தி கொடுத்தார். சுமார் 90 பேர் கலந்து கொண்டனர்.

  இங்கு ஜனவரி 19, 20 ஆகிய நாட்களில் 'பயிற்சி முகாம் ஒருங்கிணைப்பாளர்களின் செயற்குழு' கூட்டம் கூடியது.
- மதுரை : பொங்கல் விடுமுறை நாட்களில் வைகை அணையில் நடைபெற்ற முகாமில், 104 பேர் பங்கு பெற்றனர். செய்தி கொடுத்தவர்கள் திரு. பால் தேவக்குமார் மற்றும் சிலர்.
- இராமநாதபுரம் : இங்கு கிழக்கு முகவை மாவட்ட சீடத்துவ முகாம் பொங்கல் விடுமுறையில் நடைபெற்றது. சுமார் 80 பேர் கலந்து கொண்டனர்.
- சாத்தூர் : இங்கு ஜனவரி மாதம் 26ம் தேதி ஆசிரியர்கள் கூட்டம் நடந்தது. பேராசிரியர் ஹேரி டேனியல் அவர்கள் செய்தி கொடுத்தார்கள்.
- ஸ்ரீவில்லிபுத்தூர் : காமராஜர் மாவட்ட சீடத்துவ முகாம் பொங்கல் விடுமுறை நாட்களில் இங்கு நடைபெற்றது. சுமார் 75 பேர் பங்கு பெற்றனர்.
- சாயர்புரம் : இங்கு பொங்கல் விடுமுறை நாட்களில் திருநெல்வேலி மாவட்டப் பெண்களுக்கான சீடத்துவ முகாம் நடைபெற்றது சுமார் 50 பேர் கலந்து கொண்டனர்.
- திருநெல்வேலி : மாவட்டத்தில் கோவில்பட்டி, தூத்துக்குடி, விக்ரமசிங்கபுரம் ஆகிய இடங்களில் ஜனவரி 26ம் நாள் தியானக் கூட்டங்கள் நடைபெற தேவன் உதவி செய்தார்.
- பாளையங்கோட்டை : இங்கு ஜனவரி 6ம் தேதி தூய சேவியர் கல்லூரி மாணவர்களுக்கென சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.
- நாசரேத் : பொங்கல் விடுமுறை நாட்களில் இங்கு நடைபெற்ற மாணவர் சீடத்துவ முகாமில் சுமார் 105 பேர் கலந்து கொண்டனர்.
- மார்த்தாண்டம் : கன்னியாகுமரி மாவட்ட சீடத்துவ முகாம் பொங்கல் விடுமுறை நாட்களில் இங்கு நடைபெற்றது சுமார் 170 பேர் பங்கு பெற்றனர்.

ஜெபத்துணைவன்

★ **திங்கள்** -: கடலூரில் இப்மாதம் 8-ம் தேதி முதல் 10-ம் தேதி முடிய எஸ்தர் முகாம் நடைபெறுகிறது. மாணவியர் பலர் கலந்து கொள்ளவும், செய்தியாளருக்காகவும் பணத் தேவைகளுக்காகவும்,

செங்கற்பட்டில் இம்மாதம் 9,10 ஆகிய நாட்களில் நடைபெறும் நற்செய்தி முகாமுக்காகவும்

அருட்பணியில் ஈடுபடும் இயக்கங்களுக்காக ஜெபிப்போம்,

★ **செவ்வாய்** :- இம்மாதம் 9, 10 ஆகிய நாட்களில் நடைபெறும் அருட்பணி முகாமுக்காகவும்,

சென்னையில் இம்மாதம் 24-ம் தேதி நடைபெறும் இறுதியாண்டு மாணவர்களுக்கான கூட்டத்திற்காகவும், மார்ச் மாதம் 9, 10 ஆகிய நாட்களில் நடைபெறும் செயற்குழு அங்கத்தினர் பயிற்சிக்காகவும் (Committee Orientation) மார்ச் 24-ல் நடைபெறும், நன்றி செலுத்தும் கூட்டத்திற்காகவும், ஜெபிப்போம்.

★ **புதன்** :- திருச்சியில் நமது அலுவலகத்தின் புதிய கட்டிடத்தின் கட்டுமானப் பணிக்கு அரசு ஒப்புதல் கிடைக்கவும், பணி தொடங்கப்படவும் ஜெபியுங்கள் மாதத்தின் முதல் புதன் கிழமைகளில் தரிசனச்சுடருக்கென கூடி ஜெபிக்கிறோம்.

மேல்நிலைப் பள்ளி ஊழியத்திற்கு கௌரவ ஒருங்கிணைப்பாளர்கள் இருவர் கிடைக்க ஜெபியுங்கள்.

★ **வியாழன்** :- விருதுநகரில் இன்னும் 3 மேல் நிலைப்பள்ளிகளிலும் தொடர்பு கிடைக்கவும், சூலக்கரை, காரியாபட்டி ஆகிய இடங்களில் உள்ள தொழிற் கல்வி நிலையங்களில் தொடர்பு ஏற்படவும்,

சாத்தூரில் இம்மாதம் 17ம் தேதி நடைபெறும் தியானக் கூட்டத்திற்காகவும்.

சிவகாசியில் உள்ள பொறியியற் கல்லூரி மாணவர்களுக்கென ஒருநாள் தியானக் கூட்டம் ஒழுங்குபடுத்தப்படவும் ஜெபிப்போம்.

★ **வெள்ளி**:- அம்பாசமுத்திரம், பாபநாசம் ஆகிய இடங்களிலுள்ள கல்லூரிகளில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜெபக் குழுக்களுக்காகவும்,

குற்றாலத்தில் மார்ச் மாதம் 9, 10 ஆகிய நாட்களில் நடைபெறும் குடும்ப மகாநாட்டிற்காகவும்.

இம்மாதம் 17ம் தேதி நாசரேத்தில் நடைபெறும் பட்டதாரிகள் மகாநாட்டிற்காகவும் ஜெபிப்போம்.

★ **சனி** :- நம்முடைய முழுநேரப் பணியாளர்களுக்கான ஐக்கியக் கூட்டம் இம்மாதம் 25ம் தேதி முதல் 28ம் தேதி முடிய மணப்பாறையில் நடைபெறும்.

ஊழியர்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்

எந்த சமயத்திலும் சகலவித மான வேண்டுதலோடும், விண்ணப் பத்தோடும் ஆவியிலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மன உறுதியோடும் சகல பரிசுத்தவான் களுக்காகவும் பண்ணும் வேண்டுத லோடும் விழித்துக் கொண்டிருங் கள்;-

'சுவிசேஷத்திற்காகச் சங்கிலி யால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானா பதியாகிய நான் அதைப்பற்றி பேச வேண்டிய தைரியமாய் பேசத்தக்க தாக.

நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசி யத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி.

எபேசியர் 6:18-20

கிறிஸ்துவினுடைய இரகசியத் தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித் துப் பேசவேண்டிய பிரகாரமாய்ப் பேசி அதை வெளிப்படுத்துகிறதற்கு

திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி

கொலோசேயர் 4:3-4

உங்களிடத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகி மைப்படுகிறது போல் எவ்விடதிலும் பரம்பி மகி மைப்படும்படிக்கும், துர்க்குண ராகிய பொல்லாத மனுஷர் கை யினின்று நாங்கள் விடுவிக்கப்படும் படிக்கும். II தெச. 3:1,2

நாங்கள் நல் மனசாட்சியுள்ள வர்களாய் எல்லாவற்றிலும் யோக் கியமாய் நடக்க, எபி 13:18

'எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்' என்கிறார் பவுலடி கள்.

நாம் ஆண்டவரின் ஊழியர்களுக் காக எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதற்கு. பவுலின் ஆலோசனை கள் நமக்கு மாதிரிகளாய் இருக் கின்றன. தேவ வார்த்தையை தைரியமாய்ப்பேச அவர்களுக்கு வாக்கு அருளப்பட தேவனிடம் வேண்டிக் கொள்ளும்படி வலியுறுத் திக் கூறுகிறார். இந்தவிதமாய் நாமும் ஊழியர்களுக்காக ஜெபிப் போமாக.

D. இன்பராஜ் நல்லையா.
திருச்சி.

நமது ஊழியர்கள்

முழுநேரப் பணியாளர்கள்

1. திரு. ஜே. ஜேம்ஸ் இரத்னராஜ் (மாநில செயலர்)
திருமதி. ஹெலன் ஜேம்ஸ்

2. திருமதி. & திரு. R. பில்லி (சேலம், தர்மபுரி, மதுரை & இராமநாதபுரம்)

3. திருமதி. & திரு. P. சைலஸ் (திருச்சி, புதுகை, தஞ்சை & பெரியார்)

4. திரு. P. ஜெபராஜ் (சென்னை, வட, தென் ஆற்காடு, & செங்கற்பட்டு)

5. திருமதி. & திரு. மேக்ஸ்வெல் டேவிட் (உத்தரப்பிரதேசம்

ஒருங்கிணைப்பாளர்கள்:-

6. செல்வி. G. பாமினி கிறிஸ்டோபல் (மகளிர் பணி)

7. செல்வி. S. லலிதா ஹேனா (மகளிர் பணி)

8. திரு. T. ஆத்ம சொரூபன் (திருச்சி, தரிசனச்சுடர்பணி)

கௌரவ ஒருங்கிணைப்பாளர்கள்

9. திரு. ர. செல்வதுரை (சென்னை)

10. செல்வி. வயலா இராணிபெல் (கன்னியாகுமரி)

11. செல்வி. பியூலா (கன்னியாகுமரி)

12. திரு. ஆரோக்கியநாதன் (திருநெல்வேலி)

அலுவலகப் பணியாளர்கள்:-

13. திருமதி. சாந்தா பர்னபாஸ்

14 திரு. K. சண்முகம்

15. திரு. A. இராஜலிங்கம்

(16ம் பக்கத் தொடர்ச்சி)

★ எந்த வேலையாயிருந்தாலும், மன நிறைவோடு பணியாற்றுங்கள்.
★ வார விடுமுறை நாட்களில் வேலையைப்பற்றி நினைக்காதீர்கள்.
★ சரியான வேலையை செய்யப் பழகிக்கொள்ளவும்.
★ மேஜையின் மேல் குறைவான தாள்களையும், வீட்டில் பொருள்களை இருக்க் வேண்டிய இடங்களிலும் வைக்கவேண்டும். இல்லாவிட்டால் அவைகளை தேடுவதில் நேரம் விரையமாகும்.
★ வேலை நேரத்துக்கு முன்னதாக வந்து, வேலை முடிவில் நேரம் கழித்தே செல்லவேண்டும் என்பதில் நம்பிக்கை வேண்டாம்.

ஆதாரம்: "எக்னமிக் டைம்ஸ்"

வேத ஆராய்ச்சி

அழிந்து கொண்டிருக்கும் உலகிற்கு தேவனின் திட்டம்

Rev. Dr. தியோடர் வில்லியம்ஸ்

சங்கீதம் 2.

உலகின் பல பகுதிகளிலும் போர், கொடுமை அழிவு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை நாம் இன்று கண்கூடாகக் காண்கிறோம். குழப்பம் நிறைந்த இந்நிலை மூன்று நிலைகளில் இச் சங்கீதத்தில் விளக்கப்படுகிறது.

1. முதலாவது மனிதனின் எதிர்ப்பு: (Human Rebellion) மூன்று நிலைகளில் இது வெளிக்காட்டப்படுகிறது.

(i) பெருமையான நடத்தை, வ. 2.

(ii) வெறுப்புணர்வு வ 2.

(iii) கட்டுப்பாடும் ஒழுங்கும் அற்ற தன்மை வ. 3

வ. 1 ஜாதிகள் கொந்தளித்து ஜனங்கள் விருதா காரியத்தை சிந்திப்பானேன்?

கட்டப்பட்டிருக்கும் குதிரை ஒன்று ஓட முடியாமல் தவித்துத், தடுமாறிக் குழம்பிக் கொண்டிருப்பது போன்ற நிலையில் இன்று மக்கள் கூட்டம் தமக்குள்ளே வீண் காரியங்களை வருவதாகத்திட்டமிட்டு குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நிலையை இவ்வசனம் குறிப்பிடுகின்றது.

வ. 2. பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனை பண்ணி......

நாட்டின் அதிபதிகளையும் தலைமைத் தன்மை வகிக்கும் மனிதர்களையும் இப்பகுதியில் காண்கிறோம். இவர்கள் 'தமக்குள்ளே தாம்' ஆலோசனை செய்து கர்த்தரின் கர்த்தத்துவத்தைப் புறக்கணிப்பதைப் பார்க்கிறோம். இவர்கள் அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல. மக்களை எவ்விதத்திலும் பாதிக்கும் எந்த ஒரு நபரோ, பொருளோ இருக்கலாம் அதாவது தற்கால புத்தகங்கள், தொலைப்படக்காட்சி வானொலி, திரைப்படம் 1 பாடல், கவிதை நாடகங்கள் போன்றவை, மக்களிடையே தேவனைப் பற்றிய எண்ணத்தைப் புறம்பாக்கி, சுய திருப்தி, சுய நம்பிக்கை என சுயத்தையே மையமாகக் கொண்ட நிலைமையைத் தூண்டுகின்றன. இது மனிதன் தன்னைத் தான் கடவுளுக்கு மேலாக உயர்த்தும் பெருமையையே வெளிக்காட்டுகின்றது. இதனால் இப்படிப்பட்ட தூண்டுதலுக்குள்ளிருக்கும் மனிதன் குழப்பத்திற்குள்ளாகிறான்.

நாட்டில் மட்டுமல்ல, தனிப்பட்ட வாழ்விலும் ஒரு மனிதன் இவ்வாறு தன்னைத் தான் கர்த்தருக்கு மேலாக உயர்த்துவானானால் அவன் தன்னையும் தன்னைச் சார்ந்திருப்போரையும் குழப்பத்திற்குள்ளாக்குகிறான். இஸ்ரவேலின் ராஜாக்களில் சிலர் இவ்வாறு தேவனை விட்டு விலகினதால் மக்களும்

சோரம்போனார்கள் என நாம் வாசிக்கிறோம்.

(ii) வெறுப்புணர்வு 2 இது பொதுவாக மனிதனின் தன்மையில் நாம் காண்கிறோம். ஆம்! இது 'யெகோவா' வாகிய கர்த்தருக்கும் அவர் அபிஷேகம் பண்ணின மேசியாவாகிய கிறிஸ்துவுக்கும் விரோதமான ஒரு பகையுணர்வு, வெறுப்பு, ஆம் 'கடவுளைப் பற்றிப் பேசு, ஆனால் இயேசுவைக் குறிப்பிடாதே' என்று சிலர் கூறக் கேட்டிருப்பீர்கள். ஆண்டவரும் கர்த்தரும் யெகோவாகிய தேவன் நம்மிடம் முழுமையான ஒப்புக்கொடுத்தலை எதிர்பார்க்கிறார். சுயத்தை மையவாகக் கொண்டு வாழும் மனிதன் இப்படிப்பட்ட முழுமையான அர்ப்பணிப்புக்குத் தன்னை கீழடக்குவது மிகக் கடினமானது தேவனுக்கு எதிர்த்து நிற்பதற்கு இதுவே மூல காரணம்.

(iii) கட்டுப்பாடும் ஒழுங்கும் அற்ற தன்மை வ. 3. அவர்கள் கட்டுகளை அறுத்து அவர்கள் கயிறுகளை எறிந்து போடுவோம் என்கிறார்கள் தேவன் நியமித்த வரம்புகளுக்குள் இருக்க அவர்களுக்கு விருப்பமில்லை தேவன் தம் சாயலாக படைத்த மனிதனின் வாழ்க்கைக்குச் சில ஒழுக்க முறைகளை வைத்திருக்கிறார். நீரினுள் மீன் எவ்வாறு பாதுகாப்பாக வாழ்கின்றதோ அதே போன்று நாமும் இவ்வரம்பிற்குள் இருப்பின் பாதுகாப்பாக இருப்போம் ஆனால் மனிதன் எப்போதும் ஆண்டவரின் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்து வெளியேறி மனம் போல் வாழ எண்ணுகிறான். இதனால் விரைவிலேயே அவன் அடிமைத்தனத்துக்கு உள்ளாகிறான்.

iv தேவனின் பதிற் செயல் வ 4-6 பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார். ஆண்டவர் அவர்களை இகழுவார் வேடிக்கையாக கேலிபண்ணிச்சிரிப்பது அல்லது இது எல்லா அதிகாரத்தையும் உடைய ஆண்டவர் தம் கட்டுப்பாட்டுக்குள் எல்லாம் இருக்கின்றபோதும், மனிதனின் அகந்தையைக் கண்டு அவர் நகைக்கிறார். அவர்களை இகழ்கிறார். ஆம் நம்முடைய ஆண்டவர் பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் அவர் ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது எல்லாக் காரியமும் நமக்கு எதிராக நடப்பது போல் காணப்படும்நேரத்திலும் கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார் என நாம் அறிந்திருப்பது எவ்வளவு நலம்!

தேவன் பேசுகிறார். வ. 5 அவர் தமது கோபத்திலே பேசி .. .. அவர்களைக் கலங்கப் பண்ணுகிறார்.

கர்த்தர் பல வழிகளில் மனிதனோடு பேசுகிறார். அன்பினால் பேசலாம் ஒரு துக்கத்தின் மூலம் பேசலாம். இவருடைய மெல்லிய குரலுக்கு நாம் செவி சாய்க்காவிட்டால் சூழ்நிலையின் நியாயத் தீர்ப்பின் மூலம் பேசுகிறார். அதிகாரத்தோடும் நியாயத்துடனும் பேசுகிறார். சரித்திரமும் அவருடைய நியாயங்களும் அவரின் கர்த்தத்துவத்தைக் காட்டுகின்றன.

கர்த்தர் தம்முடைய ராஜாவை ஏற்படுத்துகிறார். வ. 6. மேசியாவாகிய கிறிஸ்துவை தேவன் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார் குழப்பம்

நிறைந்த உலகின் ராஜாவாக கிறிஸ்து அபிஷேகம் பண்ணப்பட்டது தேவனுடைய ராஜ்யம் நமக்குள்ளே வருகின்றதன் அத்தாட்சியாகும் மனந்திரும்பங்கள் தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று என்று ஜனங்களுக்குப் போதிக்கப்பட்டது. இன்றும் நம் மத்தியில் தேவனுடைய ஆளுகை முழுமையாக இருக்குமானுல் குழப்பம் நிறைந்த மக்களின் பல தேவைகள் சந்திக்கப்படும். இதை ஏற்றுக்கொண்ட கர்த்தருடைய சபை, அழியும் உலகிற்கு ஒரு சவாலாக நிற்க வேண்டும்.

கிறிஸ்துவின் ஆளுகை வ. 7-12 மேசியாவாகிய கிறிஸ்துவின் அபிஷேகம் இங்கு காட்டப்படுகிறது.

(i) தனித்தன்மை வாய்ந்த ஆள் தத்துவம் நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்-வ. 7. இன்று என்பது இங்கு இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை குறிக்கும் பகுதியாக உள்ளது. ரோமர். 1:4

அனைத்தின் மேலுள்ள அவர் அதிகாரம். வ. 8 எல்லா ஜனங்களையும் ஜாதிகளையும் ஆளுகை செய்து ஆண்டவராயிருப்பது கிறிஸ்துவினுடைய தன்மை, தேவனே இதை அவருக்கு ஒப்புக் கொடுத்திருக்கிருர் என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்திரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன் என்கிருர். இயேசு கிறிஸ்துவின் அடியவராகிய நாம் அவருக்கு வாக்களிக்கப்பட்ட இச் சுதந்திரத்தை அவருக்காக அவர் மூலமாய் அவராலே நாமும் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் இதுதான் நம் அருட்பணியின் அடிப்படையாகும். எல்லா மொழி இன மக்கள் கூட்டமும் கிறிஸ்துவுக்கு சொந்தமாக்குவோம்! மத்தேயு 28:18,19ல் ஆண்டவர் நமக்கு இட்ட கட்டளையும் இது தான்.

இறுதி வெற்றி வ. 9 இரும்புக் கோலால் அவர்களை நொறுக்கி ...... உடைத்துப்போவர். இங்கு குறிக்கப்படும் கோல் ஒரு மேய்ப்பனின் கோல். ஆம் அவர் ஒரு மேய்ப்பனாகிய ராஜா. மனிதன் அவருக்குத் தன்னை கீழமைந்து கொடுக்காவிடில் அவர் தமது கோலினுல் அவர்களை நொறுக்கிப் போடுவார். எனவே முடிவில், விரும்பியோ விரும்பாமலோ ஆண்டவரின் கர்த்தத்துவத்திற்கு முன் அனைவரும் பணிந்தே ஆக வேண்டும். முழங்கால் யாவும் முடங்கும், நாவு யாவும் அறிக்கை செய்யும் ... ... பிலி. 2;1,11. இப்போதும் ராஜாக்களே! . . . . (தலைமைத் தன்மையில் உள்ள அனைவருக்கும் இது காட்டப்படுகிறது)

(i) **உணர்வடையுங்கள் ...வ.10.** உங்களுக்கு நன்மை இன்னது என்று அறிந்து எச்சரிப்படையுங்கள். எதிர்த்து நிற்க வேண்டாம்.

(ii) **உங்கள் சுய சித்தத்தை அர்ப்பணித்து விடுங்கள். வ. 11.** கர்த்தரை சேவித்து, நடுக்கத்துடனே களிகூருங்கள்

(iii) **உங்கள் முழுத் தன்மை** ஆவல்களும் அவருக்கென்று முற்றிலும் சொந்தமாக அர்ப்பணிக்கப்பட்டும் நம்முடைய அன்பும் அவரைப் பற்றிய பரிசுத்த அச்சமும் வெளிப் படையாக காட்டப்பட

வேண்டும் நம் ஜீவியத்தின் கர்த்தராக அவர் இருப்பதையும் அவரின் மேல் நமது அன்பையும் எல்லாரும் அறிய அறிக்கை செய்ய ஏவப்படுகிறோம்.

அமைதியின்மையும் குழப்பமும் நிறைந்த இவ்வுலகில், ஆண்டவர் இயேசுகிறிஸ்துவை கர்த்தரும் ராஜாவுமாக ஏற்றுக்கொண்டு, அவரையே நேசித்து, பணிந்து, சேவை செய்யும் மக்களைத் தேடுகிறார்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக நற்செய்தி மாணவர் மன்ற செயற்குழு மார்ச் 3, 4 ஆகிய நாட்களில் கூடுகிறது. இறுதியாண்டு மாணவர்களுக்கான வேதாகமக் கருத்தரங்கு ஜூன் மாதம் 1ம் தேதி முதல் 15ம் தேதி முடிய நடைபெறும்.

★ ஞாயிறு:- கோடைகால விடுமுறையில், சென்னை, திருச்சி, ஈரோடு, மதுரை, நாசரேத், பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் மாணவ மாணவியருக்கென நடைபெறும் பயிற்சி முகாம்களுக்காகவும்

இப்பயிற்சிமுகாம் ஒருங்கிணைப்பாளர்கள், பயிற்சியாளர்களுக்காக சென்னை, புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடைபெறும் பயிற்சிக்கூட்டத்துக்காகவும்,

ஊட்டியில், மே மாதம் நடைபெற விருக்கும் பட்டதாரிகள் பயிற்சி முகாமுக்காகவும் ஜெபியுங்கள்.

வாழ்த்துகிறோம்

அருட்பெருந்திரு. ஜேசன் தர்மராஜ் அவர்கள் நெல்லை திருமண்டலத்தின் பேராயராகப் பொறுப்பேற்றிருப்பதற்கு மிக்க மகிழ்ச்சியடைகிறோம். தேவனைத் துதிக்கிறோம். அவர்கள் மாணவர் பணியில் அதிக ஆர்வமுள்ளவர்கள். மாணவனாக இருக்கும் போது விருதுநகர் நற்செய்தி மாணவர் மன்றத்தில் அங்கம் வகித்தார். அப்போதுதான் முழுநேரப் பணிக்கென அழைப்புப் பெற்றார். அவர்கள் ஆவியில் அனலாய் கர்த்தருக்குள் ஊழியஞ் செய்ய ஜெபிப்போம்.

நேரத்தைச் செலவு செய்தல்

நமக்கு செலவில்லாமல் கிடைக்கக்கூடிய நேரத்தை அதனுடைய முக்கியத்துவத்தை சிறிதுகூட உணராமல் எவ்வாறு விரயம் செய்கிறோம் என்பதை பிரபல சமூக விஞ்ஞானி ஒருவர் ஆராய்ந்து, ஒரு மனிதனுடைய வாழ்நாள் வீணாகும் விதத்தைப் படம் பிடித்து காட்டியுள்ளார்.

மனிதனின் சராசரி வயது 70 ஆண்டுகள். இதில் தூங்கிக் கழிக்கும் காலம் 28 ஆண்டுகள்; படிப்புக்கு 10 ஆண்டுகள்; விடுமுறை, ஓய்வு, நேர வேலை, கேளிக்கை நிகழ்ச்சிகளில் செலவிடும் காலம் 8 ஆண்டுகள்; ஓய்வு, சுகாதாரக் குறைவில் கழியும் காலம் 6 ஆண்டுகள்; பயணம் 5 ஆண்டுகள்; சாப்பிடுவதற்கு மட்டும் செலவாகும் காலம் 4 ஆண்டுகள்; தயார்படுத்திக் கொள்ளவும், ஆடைகள் அணியவும் போன்றவைகளில் 3 ஆண்டுகள் கழிகின்றன; வேலை செய்யப் பயன்படும் காலம் 6 ஆண்டுகள் மட்டும்தான்.

காலத்தை சரியான முறையில் பயன்படுத்த 20 குறிப்புகள் கீழே தரப்படுகின்றன.

- ★ காலையில் சீக்கிரமே எழுந்து இரவில் சீக்கிரமே தூங்கவும்.
- ★ உங்களுடைய கைக்கடிகாரத்தை 3 நிமிடங்கள் அதிகமாகக் காட்டும்படி அமைத்துக் கொள்ளவும்.
- ★ அன்றைய வேலையைக் காலையில் திட்டமிடுவதுடன், வரிசைப் படுத்திக் கொள்ளவும்
- ★ பயணம் செய்யும்போது சாலைக்குறிகள் அதிகமாயுள்ள சாலைகளைத் தவிர்க்கவும்
- ★ ஒரு சமயத்தில், ஒரு வேலையில் கவனத்தை செலுத்தவும் கடினமாக உழைப்பதைவிட, புத்திசாலித்தனமாக உழைக்கவும்.
- ★ வேலையை மற்றவர்களுடன் பகிர்ந்து செய்யவும்
- ★ வேலை நேரத்தில் குறைவாகப் பேசவும்.
- ★ மதிய உணவு மிதமாக இருக்கட்டும். அப்போதுதான் உண்ட மயக்கம் ஏற்படாது.
- ★ தவிர்க்கப்பட வேண்டிய பழக்க வழக்கங்களைப் பரிசீலித்துத் தவிர்க்கவும்.
- ★ தோல்வியால் துயரத்தில் மூழ்கவேண்டாம்.
- ★ தொலைக்காட்சிப் பெட்டியைத் தவிர்க்கவும், முடியவில்லையானால் விடுமுறை நாட்களில் மட்டும் உபயோகிக்கவும்.
- ★ வேலை செய்யும் இடத்திற்கு அருகாமையில் வசிப்பது நல்லது.

மிஷனரி பகுதி

ஐரிஸ் பால்

ஒரிசாவில் நடந்த கட்டாக், அருட்பணியாளர்கள் மகாநாட்டில் என் உள்ளத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியது சகோதரி ஐரிஸ்பால் அவர்களின் சாட்சி.

சென்னை நகரைச் சேர்ந்த இந்த சகோதரி, தன் கல்லூரிப் படிப்பை சென்னையில் தொடங்கினார்கள். ஆரம்பத்தில் இளம் அறிவியல் பட்டப்படிப்புக்கே வாய்ப்புக் கிடைத்தது அதில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்கள் தன் கல்லூரி நாட்களில் ஆண்டவரை E. U. குழு மூலமாக ஏற்றுக்கொண்ட ஐரிஸ் கர்த்தரின் அன்பை ருசிக்க ஆரம்பித்தார்கள் கர்த்தரின் கிருபையால் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்துப் படிக்கும்போதே ஆண்டவருடைய ஊழியங்களிலும் ஈடுபட்டார்கள். அப்போதே, மலைவாசிகள் மத்தியில் ஊழியம் செய்ய வேண்டும் என்றும் ஒரு அருட்பணியாளரையே மணந்து, ஊழியத்தைத் தொடரவேண்டும் எனவும் வாஞ்சித்தார்கள். அதற்காகத் தொடர்ந்து ஜெபித்தார்கள்.

தேவன் ஐரிஸின் ஜெபத்தைக் கேட்டார். சகோ. R A C. பால் என்ற கால்நடை மருத்துவர், மல்கன்கிரி (ஒரிசாவில்) போண்டா மலைவாசிகள் மத்தியில் ஊழியம் செய்து வந்தார். அவரைக் குறித்து தந்தை கூறியதும் ஐரிஸீக்கு ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது. சகோ. பாலுக்கு சிறுநீரகக் கோளாறு அடிக்கடி ஏற்படும். அந்த ஊழியக்காரருக்கு உற்ற துணையாக இருக்க ஒரு மருத்துவம் படித்த பெண்ணால்தான் இயலும் என்பதை ஐரிஸீக்கு ஆண்டவர் உணர்த்த மனப்பூர்வமாக சகோ. பாலை திருமணம் செய்ய சம்மதித்தார்கள்.

திருமணத்திற்குப்பின் மறுபடியும் சிறுநீரகம் சேயல்படவில்லை. அவசர நிலையில் மாற்றுச் சிறுநீரகம் பொருத்த அமெரிக்கா சென்றார். ஆண்டவருடைய சித்தத்தால், விபத்தில் உயிர்நீத்த பெண்ணின் சிறுநீரகம் கிடைக்க மாற்றுச் சிறு நீரகம் பொருத்தப்பட்டு, நலத்துடன் சகோ. பால் திரும்பி வந்தார்கள்.

அவர்கள் ஊழியத்தை முதலில் இந்திய அருட்பணி இயக்கத்தில் இணைந்து, தொடங்கி, இப்போது தனியாகவே அம்மக்களுக்கு உதவுகின்றனர். அவர்களது ஆவிக்குரிய ஜீவியத்திலும், சமுதாயப் பிரச்சனைகளிலும், கால்நடை மருத்துவத்திலும், மக்கள் பிணி நீக்கவும் உதவுகின்றனர்.

அவர்களுக்கு மனோரஞ்சன், ராக்லண்டு என்ற பிள்ளைகள் உள்ளனர். ஊழியத்தின் காரணமாகப் பிள்ளைகளை அருகில் வைத்துப்பார்க்க இயலாது, அவர்களை சந்தோஷ் வித்தியாலயா, டோனவூரில் படிக்க வைத்திருக்கிறார்கள். தொடர்ந்து சகோதரியின் குடும்பத்துக்காகவும் அவர் கணவர் தொடர்ந்து நலம் பெற்று ஊழியங்களை விரிவாகச் செய்யவும் ஜெபியுங்கள்.

—மிஷினரி முகாம் சென்றுவந்த ஒரு சகோதரி.

Rev. Dr. தியோடர் வில்லியர்ஸ் அவர்களின் பேட்டி :

[கட்டாக் அருட்பணி மாநாட்டில் தரிசனச் சுடருக்கென பேட்டி கண்டு தொகுத்தளித்தவர் சகோ. ஆத்மசொருபன்.]

1. ஆண்டவரை உங்கள் வாழ்க்கையில் எப்போது ஏற்றுக் கொண்டீர்கள் ?

1953-ஆம் ஆண்டில் மாணவர் கிறிஸ்தவ இயக்கம் நடத்திய கூட்டத்தில் நான் ஆண்டவரைப்பற்றிக் கேள்விப்பட்டேன். 1954 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மனம் திரும்பி ஆண்டவரை முழுமையாக ஏற்றுக் கொண்டேன்.

2. அருட்பணி ஊழியத்தைப் பற்றி நீங்கள் எப்போது, யார் மூலம் கேள்விப்பட்டீர்கள் ?

1956 ஆம் ஆண்டு, கிறிஸ்துவுக்கு இளைஞர் இயக்கம் (YFC) வேதாகம முன்னணி (Bible League) மற்றும் தாகமுள்ள ஒருசிலர் சேர்ந்து நடத்திய 'கிறிஸ்துவுக்கு சென்னை' என்ற கூட்டத்தில் மிஷனரிப் பணியைப் பற்றிய தாகம் எனக்குள் எழுந்தது. மேலும், மதுரை தூத்துக்குடி ஆகிய இடங்களில் நடந்த விடுமுறை வேதாகமப் பள்ளியில் நான் கலந்து கொண்டதும், கிறிஸ்துவைப்பற்றி மற்றவர்களுக்குக் கூறவேண்டும் என்ற தாகத்தை அதிகப்படுத்தியது.

3. அருட்பணியைப் பற்றிய தாகம் மேலும் வளர உங்களுக்கு உதவியாயிருந்தது என்ன?

இம்மானுவேல் மெதடிஸ்ட்சபை எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. அந்த சபையில் வாலிபர் இயக்கத்தோடு எனக்கு இருந்த தொடர்பும், திறந்தவெளிச் பிரசங்கங்களில் நான் ஈடுபட்டதும் என்னுடைய தாகத்தை வளர்த்தன.

4. முழுநேரப் பணியாளராக எப்போது பொறுப்பேற்றீர்கள் ?

1959-ஆம் ஆண்டு கோவில்பட்டியில் உலகப்படத்தை வைத்து அருட்பணி ஊழியத்தைப்பற்றி நானும், திரு P. சாமுவேல் திரு சாம்கமலேசன், திரு. விக்டர் ஆகியோரும் கலந்துரையாடி அப்போதுதான் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவை ஆரம்பித்தோம். 'அறைகூவல்' என்ற பத்திரிக்கையையும் ஆரம்பித்து, நான் அதன் ஆசிரியராகப் பணிசெய்தேன் பின் 1965 ஆம் ஆண்டு இந்திய அருட்பணி இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றுகிறேன்.

5. உங்கள் ஊழியத்தில் எந்த விதத்தில் முன்னேற்றம் காண்கிறீர்கள் ?

இந்திய அருட்பணி இயக்கத்தின் மூலமாக நிறைய மக்கள் கூட்டத்தை (People group) தேவன் சந்தித்திருக்கிறார். கோகா, கொக்குவு, லம்பாடி குஞவி, கொண்டு, எருக்கலா, நீத்தாக்கனி போன்ற இன மக்களின் மத்தியில் சபைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. அநேகர் கிறிஸ்துவை விசுவாசித்து சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். உலக

அளவில் உள்ள அருட்பணி இயக்கங்களில் 22 பேர் தலைமைப் பொறுப்பில் பணியாற்றுகின்றனர்.

6. உங்கள் வெவ்வேறு பணிகளைப்பற்றி கூறுகிறீர்களா ?

இந்திய அருட்பணி இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருக்கிறேன். பெங்களூரில் உள்ள தலைமை அலுவலகத்திலிருந்து பணிகளைக் கவனித்துக் கொள்கிறேன் உலக நற்செய்தி ஐக்கியத்தின் (WEF) அருட்பணி செயலாளராகவும், பணியாற்றுகிறேன். என்னுடைய நேரத்தில் நான்கில் ஒரு பகுதியை உலக நற்செய்தி இயக்கத்திற்குச் செலவழிக்கிறேன். நற்செய்தி மாணவர் மன்றத்தின் உதவித் தலைவர்களுள் ஒருவராகவும் இருக்கிறேன்

7. இந்திய அருட்பணி இயக்தின் எதிர்காலத் திட்டங்கள் என்ன?

இந்திய அருட்பணி இயக்கத்தைத் தலைமையேற்று நடத்தக்கூடிய தலைவர்களை உருவாக்குவதில் ஈடுபட்டிருக்கிறோம். மக்கள் கூட்டம் ஒவ்வொன்றிற்கும் ஒரு சபையை நிறுவுவது இதன் நோக்கமாகும். பலமொழி பேசும மக்கள் மத்தியில் சபையை நிறுவினால் மட்டும் போதாது. அவர்களை வளர்க்க வேண்டுமல்லவா? அதற்கென்று அவர்களுடைய மொழியிலே வேதப்புத்தகம் கிடைக்கும்படி செய்ய மொழி பெயர்ப்பாளர்களை நியமிப்பதற்கும் பாடுபடுகிறோம்.

இப்பொழுது நடைபெறும் அருட்பணி மகாநாட்டிலிருந்து நீங்கள் எதிர்பார்ப்பது என்ன ?

ஒவ்வொரு பட்டதாரியும் மாணவனும் தேவனுடைய அருட்பணி திட்டத்திற்குள் அமையவேண்டும். அதற்கு இம்மகாநாடு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கிறேன். முழு நேரப் பணிக்கென நிறையப் பேர் ஒப்புக் கொடுக்க வேண்டும் என்பதல்ல. தேவன் தங்களுக்கென என்ன திட்டம் வைத்திருக்கிறார் என்று அறிந்து அதை நிறைவேற்ற முழு மூச்சுடன் பணிசெய்யவேண்டும்.

9. உங்களுக்கு இந்த மகாநாடு உற்சாக மூட்டுவதாயிருந்ததா?

ஆம் மகாநாட்டிற்கு வந்த ஒவ்வொருவரும் தவராது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதும், கவனித்துக் கேட்டதும் மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியதாயிருந்தது. கருத்தரங்குகளிலும் மாணவர்களுடைய பங்கு சிறப்பாக இருந்தது.

10. இந்தியாவில் அருட்பணி இயககங்கள் நடத்துகின்ற கூட்டங்கள் வாயிலாக போதுமான ஊழியர்கள் கிடைத்து வருகிறார்களா?

ஆம். இந்திய அருட்பணி இயக்கத்தில் நிறைய அருட்பணியாளர்கள் உண்டு. சபை ஊழியங்களில் ஈடுபடுகிறார்கள் நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவிலும் கூட அநேக அருட்பணியாளர்கள் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

11. உங்கள் ஊழியத்தில் ஏற்படுகிற எதிர்ப்புகள் சோர்வுகள் பற்றி கூறுங்களேன்.

'இந்திய அருட்பணி இயக்கத்தை'த் தொடங்கும் போது அநேகர், நண்பர் சுவிசேஷ ஜெப குழு இந்தப் பணியை செய்து வரும் போது இந்த இயக்கம் எதற்கு, என்று வினவினார்கள். தனிப்பட்ட ஆள் ஊழியம் என்று கூட பேச ஆரம்பித்தனர். சுமார் 6 வருடங்கள் நான தனியாக எல்லா வேலைகளையும் செய்ய வேண்டியிருந்தது 1971 ஆம் ஆண்டிற்குப்பின் தேவையான அலுவலக ஊழியர்களை தேவன் அனுப்பினார் இப்போது 7 பேர் செயலாளராகப் பணி புரிகிறார்கள்.

(தொடரும்)

புதிய எருசலேம் குமாரத்திகளுக்கு ஓர் அழைப்பு!

என் குமாரத்திகளே!
என் ஜனம் அழிகிறது!
என் இதயம் குழம்புகிறது!
எனும் பரலோகத் தந்தைக்கு

என் ஜனம் அழிவதை
என்னால் சகிக்கக் கூடுமோ?
எனக் கதறும் எஸ்தர்களே!
இன்றைய தேவை

எஸ்தர் முகாமிற்கு வாரீர்
ஏற்றிவிடுர் இந்த அழைப்பை!
ஏசுவின் சொற் கேட்க
ஏகிடுவீர் கடலூர் நோக்கி

காலம்: **8-2-85 மாலை 6 மணி முதல் 10-2-85 மதியம் 1 மணி வரை**

இடம்: **ALC SPIRITUAL CENTRE**
CUDDALORE

பேசுபவர்:

திரு. விக்டர் ஞானராஜ் பெங்களூர்
ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

SUMMER SCHOOL ON DISCIPLESHIP FOR SENIORS AND FAMILIES

Date: May 7th Noon to 12th Noon 1985

Place: Ooty

Pray, Plan and Participate

For further details:

Mr. N. SAM MANOHAR,
K 3/12, BHEL Township,
Trichy – 620 014.

PRINTED MATTER

Registered No. M 2/6635/81
Regd. No. TN/TR/59
Licenced to post without Prepayment

To

8. MR. DHARMASADHU,
Thirunalaiyur,
Nazareth post,
Tirunelveli dt.

தரிசனச்சுடர் கிடைப்பதில் உங்களுக்குப் பிரச்னை இருந்தால் உடனே எங்களுக்கு எழுதி, உங்கள் சரியான விலாசத்தையும் அனுப்புங்கள்.

- ஆசிரியர் குழு

Return requested:
THARISANA SUDAR
UESI-TN OFFICE,
GURU MEDICAL HALL,
TRICHY - 620017.

Paul Printers, Puthur, Trichy-17.